<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 221/2014 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | கணேசன் | நாள் | 26.03.2024 |
| தகப்பனார் பெயர் | கவுண்டப்பன் | | |

**<u>பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-</u>**

4) நானும், என் சகோதரர் முனுசாமியும் பாகப்பத்திரம் ஏற்படுத்தி பாகம் பிரித்து கொண்டதாக நான் சொல்லும் நிலையில், மேற்படி பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பாகபிரிவினை பத்திர அடிப்படையில்தான் நான் பட்டா பெற்றுள்ளேனா என்றால், ஆமாம். அவ்வாறு பாகம் பிரித்து கொண்டதில் எனக்கும், என் சகோதரர் முனுசாமிக்கும் எவ்வளவு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால், எனக்கு 1.80 ஏக்கர் நிலமும், என் சகோதரருக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது என எனக்கு தெரியவில்லை.

5) தற்போது எந்த சர்வே எண்ணிலுள்ள சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், கூணாண்டியூர் கிராமம் ச.எண்.31/2 ல் உள்ள சொத்திற்கு மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வேறு சர்வே எண்கள் தொடர்பாக நான் வழக்கு தாக்கல் செய்யவில்லையா என்றால், ஆமாம். ச.எண்.31/2 ல் கரை உள்ளது என்றால், சரிதான். மேற்படி கரைக்கு மேல் பகுதியில்தான் எனது பாக நிலம் உள்ளது என்றால், சரிதான். மேற்படி கரைக்கு கீழ்பகுதியில் தான் பிரதிவாதி நிலம் உள்ளது என்றால், சரிதான். என் நிலம் வடக்கிலும், பிரதிவாதி நிலம் தெற்கிலும் உள்ளது.

6) மேற்படி கரைக்கு கீழ்பகுதியில் எனக்கு எவ்வளவு நிலம் உள்ளது என்றால் சுமார் 0.09 சென்ட் இருக்கும். பிரதிவாதி என் நிலத்தை குறைந்த விலைக்கு தனக்கு விற்க சொல்லி கேட்டதாக நான் சொல்லியுள்ள நிலையில், அவ்வாறு பிரதிவாதி எப்போது கேட்டார் என்றால், பிரதிவாதி என்னிடம் என் நிலத்தை அவருக்கு விற்க சொல்லி கேட்கவே இல்லை. அவ்வாறு பிரதிவாதி என் நிலத்தை விற்க சொல்லி கேட்டதாக என் முதல் விசாரணை சாட்சிய வாக்கு மூலத்தில் சொல்லப்பட்டிருந்தால், அது

தவறானதா என்றால், ஆமாம்.

7) தாவா சொத்தில் நடப்பட்டிருந்த அத்துக்கற்களை யார் அப்புறப்படுத்தியதாக நான் சொல்கிறேன் என்றால், பிரதிவாதிதான் அப்புறப்படுத்தினார். அப்போது தகராறு ஏற்பட்டதாகவும், அது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டதாகவும் நான் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். மேற்படி புகார் தொடர்பாக போலிசார் ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளனரா என்றால், நீதிமன்றத்தில் பார்த்துகொள்ள சொல்லி அனுப்பிவிட்டனர். என் புகாரில் உண்மையில்லாததால்தான் அவ்வாறு மேற்படி புகாரையே போலிசார் ஏற்க மறுத்துவிட்டனர் என்றால், சரியல்ல.

8) இவ்வழக்கை நான் தாக்கல் செய்யும்போதே பிரதிவாதி என் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துவிட்டதாக சொல்லிதான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். என் நிலத்திற்கு தென்புறமாக உள்ள பிரதிவாதியின் நிலத்தில், பிரதிவாதி சுமார் 50 ஆண்டுகளாக வீடு கட்டி, அதில் வசித்து வருகிறார் என்றால், சரியல்ல. சுமார் 15 ஆண்டுகளாகத்தான் மேற்படி நிலத்திலுள்ள வீட்டில் வசித்து வருகிறார். பிரதிவாதி அவருக்கு சொந்தமான நிலத்தில்தான் வீடு கட்டி வசித்து வருகிறார் என்றாலும், என்னுடைய நிலத்தை அவர் ஒருபோதும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றாலும், சரியல்ல.

9) என் நிலத்திற்கு பட்டா வாங்குவதற்கு முன்பு தாவா சொத்தை அளந்து பார்த்து நான் பட்டா வாங்கினேனா என்றால், இல்லை. என் அண்ணன் அளந்து கொடுத்துவிட்டு, இறந்துவிட்டார். மேற்படி அளவுகளின் அடிப்படையில்தான் நான் பட்டா பெற்றேன். நான் முறையான ஆவணங்களை தாக்கல் செய்து, சொத்தை சர்வேயர் மூலம் அளந்து பட்டா பெறாமல், பிரதிவாதியின் நிலத்தையும் சேர்த்து தவறாக என் பெயரில் பட்டா பெற்றுள்ளேன் என்றால், சரியல்ல.

10) தவறான பட்டாவின் அடிப்படையில் பிரதிவாதியின் நிலத்தையும் சேர்த்து அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யான காரணங்களை கூறி பிரதிவாதிக்க

இடையூறு செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதனால், என் வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும், சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்திற்கு வந்து அளந்தபோது எனக்கு பாத்தியப்பட்ட நிலங்களை மட்டும்தான் அளந்தார் என்றாலும், பிரதிவாதியின் நிலத்தை அளக்கவில்லை என்றாலும், சரிதான். பிரதிவாதி நிலத்திற்கும், என் நிலத்திற்கும் இடையே சுமார் 4 அடி உயரத்திற்கு கரை உள்ளது என்றாலும், அவ்வாறுள்ள நிலையில் மேற்படி கரைக்கு கீழ் பகுதியில் எனக்கு நிலம் இருப்பதற்கு வாய்ப்பில்லை என்றாலும், இல்லாத நிலத்திற்காக தவறாக உரிமைகோரி வழக்கிட்டுள்ளேன் என்றாலும், சரியல்ல.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.